திரு. பெ. மலேச்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நிதிப்பற்றுக்குறை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நிதிப் பற்றுக்குறை செந்தமிழ் கல்லூரிக்கு இல்லை. இப்போது கூட ஒரு லட்சம் ரூபாய் இதற்கு நிதி இருப்பதாக கூறப்படுகிறது. எனவே இப்போது நிர்வாகத்தை மாற்றி புதிய நிர்வாகத்தை அமைத்தால் நிச்சயமாக செந்தமிழ் கல்லூரி இயங்க வாய்ப்பு இருக்கிறது, என்பதை அரசு உணர்ந்து வேறு நிர்வாகத்தை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கழக உறுப்பினர் கோருகிற மாற்றத்தை மதுரை தமிழ் சங்க விதி முறைகளுக்கு உட்பட்டுத்தான் செய்ய இயலும். இப்போது உள்ள நிர்வாகத்தை அரசு மாற்றுவது என்பது இயலாது. தமிழ் சங்கத்தின் விதி முறைகள் அந்த அடிப்படையில் அமைந்திருக் கின்றன. அதை மாற்றவேண்டும். அதை மாற்றுவதற்கான சூழ் நிலையை கழக உறுப்பினர் செய்வார் என்று நம்புகிறேன்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1971-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவை அறி முகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறி முகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) 1971-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்ற (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்ற (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இச் சட்டமுன்வடிவை அறி முகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.